1995 மார்ச் 28]

அமைக்க வேண்டுமென்றால் மாநகராட்சிதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநெல்வேலி பொருட்காட்சியைப் பொறுத்தமட்டில், அங்கே நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நிறுத்தப்பட்டது. நிறுத்தப்பட்ட பொருட்காட்சியை திரும்ப நடத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டதற்கிணங்க, 1993ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வருகிறது. அந்த அளவிலே பொருட்காட்சி தொடர்ந்து நடத்தப்படும். நிரந்தரமாக பொருட்காட்சி நடத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரமான பொருட்காட்சிகள் தமிழ்நாட்டில் எங்கே எல்லாம் இருக்கின்றன? ஒரு அரங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் என்ன செலவாகும் என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சி நடத்துவதற்கான நிரந்தர அரங்கம் தமிழ்நாட்டிலே எங்குமில்லை. ஆனால் மதுரையிலே தமுக்கம் கலை அரங்கம் இருக்கிறது. அது மாநகராட்சிக்குச் சொந்தமானது. அதைப்போல சேலத்திலே பொருட்காட்சி நடத்தப்படுகின்ற இடம் சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம். அதைப்போல கோயம்பத்தூரிலே நடத்தப்படும் இடம் சிறைத் துறைக்குச் சொந்தமான இடம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 137, டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

137—

பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்

*33377—**டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செய்யப்படும்?

[1995 மார்ச் 28

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இதற்கான கருத்துரு பெறப்பட்டுள்ளது.

(ஆ) மேல்மட்டக் குழுவில் வைத்து, அதன் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கைகள் தொடரப்படும்.

டாக்டர் ஆ. வெ. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலே கல்வித் துறையிலே இரண்டாவது இடத்திலேயும், கல்லூரிக் கல்வியிலே கேரள மாநிலத்திற்கு இணையாக இன்றைக்குத் தமிழகத்தை மாற்றிக் கொண்டிருக்கும் இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் தமிழகத்தில் எழுத்தறிவில் மிகவும் குறைந்த தர்மபுரி மாவட்டத்தில், மிகவும் பின்தங்கிய எனது தொகுதியில் கடந்த ஆண்டே இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டது. இன்றைய தினத்தில் சுமார் 1000 மகளிர் பயின்று வரும் பள்ளி பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளி. பாப்பாரப்பட்டி ஒரு பேரூராட்சிப் பகுதி. சுமார் 40 கிராமங்கள் சுற்றியுள்ள பகுதி. அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில்தான் பெண்ணாகரத்தில் மகளிர் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. எனவே பெண்கள் முன்னேற்றத்திற்காக நல்ல திட்டங்ளைச் செயலாற்றிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் அவர்களுடைய நல்லாட்சியிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் கருத்துரு பெறப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றியைத் தெரிவித்து, இந்த நிதி ஆண்டிலேயே பாப்பாரப்பட்டி மகளிர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் தொகுதியில் பாப்பாரப்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளியில் 126 மாணவிகள் உயர் வகுப்பில் பயின்றனர் என்று குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அங்கே ஏற்கெனவே ஒரு அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. 1995 –96 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தவேண்டுமென்ற முன்மொழிவு பெறப்பட்டு இருக்கிறது. இந்த முன்மொழிவை மேல்மட்டக் குழுவின் பரிசீலினைக்கு வைத்து,

1995 மார்ச் 28]

அந்தக் குழுவின் பரிசீலனை மற்றும் பரிந்துரை அடிப்படையில் நிதியாதாரத்திற்கு ஏற்ப, மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அந்த நேரத்தில் உறுப்பினர் இங்கே தெரிவித்த கருத்துக்கள் அத்தனையும் கருத்தில் கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 138, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

138—

துத்திபட்டில் வேலூர் கூட்டுறவு வங்கி கிளை துவங்குதல்

*35714—**டாக்டர் ஜெ. பரந்தாமன் :**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு -அம்பேத்கர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், துத்திபட்டில் வேலூர் கூட்டுறவு வங்கி கிளை ஒன்று திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திறக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் மற்ற மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து திறமைக்காகப் பெறுகின்ற விருதுகளைக் காட்டிலும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தமிழகம் மட்டும் தனியாக அதிகமாக மிக அதிகமாக விருதுகளை கூடுதலாகப் பெரும் காலகட்டத்தில், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை, எக்ஸ், ஒய், இசட் என்ற எத்தனை பேர் சேர்ந்து எதிர்த்தாலும், டாக்டர் புரட்சித் தலைவி ஒருவரே தனியாக வெற்றி பெறுவது போல, போக்குவரத்து, எரிசக்தி, காற்றாலை மின்சாரம், சமூக நலம், உடல் ஊனமுற்றோர் நலம், வேளாண்மை, மக்கள் நல்வாழ்வு என்று எல்லாத் துறைகளும் விருது பெறும் இந்த நன்னாளில் தற்போது முதல்முறையாகக் கூட்டுறவு நிலவள வங்கியின் சிறந்த பணிக்காக இந்தியாவில் முதல் பரிசைப் பெறவைத்த புரட்சித் தலைவி